# தினசரி வழிபாட்டு முறை



# 4. ஸ்ரீ சத்குரு பாத ஸ்தோத்திரம்

அமர்ஜோதி குருபாதம் அழிவொன்றில்லாத பாதம்
அமரர்களும் அடைந்தறியா ஆனந்த குருபாதம்
பெருவாரி மதங்களெல்லாம் போற்றும் குருபாதம்
வேதாந்த ஸாரமதாய் விளங்கும் மெய்குருபாதம் 1

நம்பிக்கை கொண்டார்க்கென்றும் நலமருளும் குருபாதம்
நாதபிந்து கலாதிகளை போதிக்கும் குருபாதம்
நாரதாதி முனிவர்களும் நவின்று போற்றும் குருபாதம்
நரர்களுக்கும் சுரர்களுக்கும் நடுவான குருபாதம் 2

வேதம் நாங்கும் புகழ்ந்திடுமெய்ப் போதமான குருபாதம்
வேண்டியநாம் வேண்டியாவா றெமக்கருளும் குருபாதம்
ஆரணங்கள் யாவற்றிர்கும் ஆதாரமான் குருபாதம்
ஹரிஹரனும் அயனும் தேடி அடைந்திடாத குருபாதம் 3

காலதேசங்கள் யாவும் கடந்து நிற்கும் குருபாதம்
கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பூட்டும் குருபாதம்
எல்லார்க்கும் இடமளிக்கும் ஏகாந்த குருபாதம்
வல்லாரும் வரதனுமே வணங்கிடும் குருபாதம் 4